**கவனிக்க.-** 2016.05.13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1968 - 2016 මැයි මස 20 වැනි සිකුරාදා - 2016.05.20

*1968 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 102 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.-** அக்குறணை பைதுஸ் ஸகாத் (கூட்டிணைத்தல் ) சட்டமூலம் 2016, ஏப்பிறல் 01ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, யூன் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, மே மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# நானாவித அறிவித்தல்கள்

## பீ. ஹரிசன் சமுதாய அபிவிருத்தி மன்றம்

[2014 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பீ. ஹரிசன் சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் மூலமாக நிறுவப்பட்டது.]

**அறிமுகம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 2014 ஆண்டின் 44 ஆம் இலக்க பீ. ஹரிசன் சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் ஏழாவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பீ. ஹரிசன் சமுதாய அபிவிருத்தி மன்றத்தின் (இதனகத்துப் பின்னர் மன்றம் எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) மகாசபையினால் 2016 ஏப்பிறல் 20 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு விதிக்கப்படுகின்ற மேற்படி மன்றத்தின் நிர்வாக ஒழுங்குவிதிகள் என இது எடுத்துக் காட்டப்படலாம்.

### 1. உறுப்பாண்மை பற்றிய விதி

**1.1 உறுப்பாண்மையை வகைப்படுத்துதல்**

(அ மன்றத்தின் உறுப்பினர்கள் ஆயுட்கால உறுப்பினர்கள் மற்றும் இணை உறுப்பினர்கள் என வகைப்படுத்தப்படுவர்.

(ஆ) மன்றத்தின் ஆயுட்கால உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐந்து பேர்களை விஞ்சுதல் ஆகாது.

(இ) ஆயுட்கால உறுப்பினர்கள் மன்றத்தின் மகாசபையின் உறுப்பினர்கள் ஆவர்.

(ஈ) மன்றத்தின் தலைவரின் பரிந்துரையின் பேரில் பணிப்பாளர் சபையினால் இணை உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதோடு அவர்கள் மன்றத்தின் மகாசபை உறுப்பினர்களாக அமையமாட்டார்கள்.

**1.2 உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளல்**

(அ) ஆயுட்கால உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளும் அதிகாரம் தலைவரின் பரிந்துரையின் பிரகாரம் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ஆ) இணை உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**1.3 ஆயுட்கால உறுப்பினர்கள்**

(அ) பீ. ஹரிசன் அவர்கள், அவரது பாரியார் மற்றும் அத்தம்பதிகளின் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள் ஆயுட்கால உறுப்பினர்களாவர்.

(ஆ) மன்றம் கூட்டிணைக்கப்பட்ட 2014 நவெம்பர் மாதம் 24 ஆம் திகதியளவில் மன்றத்தில் உறுப்பாண்மை வகித்த அனைவரும் மன்றத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

(இ) மன்றத்தின் தலைவரின் பரிந்துரையின் பேரில் பணிப்பாளர் சபை அங்கீகாரம் மூலமாக ஆயுட்கால உறுப்பாண்மைக்கு சேர்த்துக்கொள்ள இயலுமானதாக அமையும்.

(ஈ) எவ்வாறாயினும் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐந்து பேர்களை விஞ்சுதல் ஆகாதென்பதோடு இந்த எண்ணிக்கையை விஞ்சுவதற்கான விதிகளின் திருத்தத்திற்காக மகாசபையின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

**1.4 இணை உறுப்பினர்கள்**

மன்றத்தின் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக தன்னார்வ அடிப்படையில் முன்வருகின்ற எந்த ஒருவரையும் இணை உறுப்பினராக சேர்த்துக்கொள்வதற்கான அதிகாரம் மன்றத்தின் தலைவருக்கு உண்டு.

**1.5 ஆயுட்கால உறுப்பாண்மையிலிருந்து நீக்குதல்**

(அ) எவரேனும் ஆயுட்கால உறுப்பினர் மன்றத்தின் மேம்பாட்டுக்கும் எதிர்கால வழியுரிமைக்கும் பாதகமேற்படும் வகையில் நடந்துகொள்கின்றமை அறிவிக்கப்பட்டால் சுருக்கமுறையான விசாரணையொன்றின் பின்னர் அவரை ஆயுட்கால உறுப்பாண்மையிலிருந்து நீக்க பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் உண்டு.

(ஆ) ஆயுட்கால உறுப்பாண்மையிலிருந்து நீக்குதல் சம்பந்தமாக விடயங்களை எடுத்துரைக்கவேண்டிய அவசியமேற்பட மாட்டாது.

**1.6** இணை உறுப்பாண்மையிலிருந்து நீக்குதலும் வெளியேற்றுதலும் மன்றத்தின் தலைவரின் தற்றுணிபின்படி மேற்கொள்ளப்பட இயலும்.

**1.7 உறுப்பாண்மையிலிருந்து இராஜினாமா செய்தல்**

(அ) ஆயுட்கால உறுப்பாண்மையிலிருந்து தன்னிச்சையாக இராஜினாமா செய்ய இயலுமென்பதோடு தனது கோரிக்கையை பணிப்பாளர் சபை செயலாளரிடம் எழுத்தில் அறிவிக்க வேண்டும்.

(ஆ) மேலே (அ) இன் பிரகாரம் இராஜினாமாவை ஏற்றுக்கொள்ள அல்லது ஏற்றுக்கொள்ளாதிருக்க பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் உண்டு.

(இ) இராஜினாமாவை பணிப்பாளர் சபை ஏற்றுக்கொள்வதாயின் பணிப்பாளர் சபையின் செயலாளரால் அது பற்றி சம்பந்தப்பட்டவருக்கு எழுத்தில் அறிவிக்க வேண்டும்.

### 1.8 உறுப்பாண்மை இல்லாதொழிதல்

கீழே குறிப்பிட்ட காரணங்களின் பேரில் உறுப்பாண்மை இல்லாதொழியும் :-

(அ) உறுப்பினரின் இறப்பு;

(ஆ) உறுப்பினர் சித்தசுவாதீனமற்றவராதல் அல்லது முனைப்பாக பங்கேற்க இயலாத அளவுக்கு உடல்ரீதியாக பலவீனநிலையுறல்;

(இ) குற்றச் செயலொன்றுக்கான தவறாளியாகியமை காரணமாக சிறைவைக்கப்படல்.

### 1.9 உறுப்பாண்மைக் கட்டணம்

(அ) ஆயுட்கால உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒருதடவை மாத்திரம் செலுத்துகின்ற உறுப்பாண்மைக் கட்டணமாக ஆயிரம் ரூபா ( 1,000/-) பணத் தொகையை மன்றத்திற்குச் செலுத்த வேண்டும்.

(ஆ) உறுப்பாண்மையிலிருந்து இராஜினாமா செய்தல், நீக்குதல், இல்லாதொழிதல் காரணமாக இந்த உறுப்பாண்மைக் கட்டணத்தை மீளப்பெறுவதற்கான உரிமை எவருக்கும் கிடையாது.

### 2. மன்றத்தின் மகா சபை

### 2.1 மகா சபையின் உள்ளடக்கமும் செயற்பாடும்

2.1.1 மன்றத்தின் மகா சபை அதன் ஆயுட்கால உறுப்பினர்களை உள்ளடக்கியதாகும்.

2.2.2 விதி 3.2 (அ) பிரகாரம் நியமிக்கப்படுகின்ற மன்றத்தின் தலைவராக செயலாற்றுகின்றவர் மகா சபையின் தலைவராவார்.

2.2.3 விதி 03 (ஆ) பிரகாரம் நியமிக்கப்படுகின்ற பணிப்பாளர் சபை செயலாளர்/பணிப்பாளர் (அபிவிருத்தி மற்றும் உறுப்பினர் உறவுகள்) மகா சபையின் செயலாளர் ஆவார்.

### 2.2 மகா சபையின் தத்துவங்கள்

2.2.1 மன்றத்தின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய விதிகளை விதித்தலும் நிலவுகின்ற விதிகளை காலத்திற்குக்காலம் திருத்தியமைத்தல் மற்றும் / அல்லது முடிவுறுத்துதல்.

2.2.2 வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரித்தல்.

2.2.3 வருடாந்த செயற்பாட்டு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை அங்கீகரித்தல்.

2.2.4 விதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க மன்றத்தின் பணிப்பாளர் சபையில் தோன்றுகின்ற வெற்றிடங்களை நிரப்புதல்.

2.2.5 மன்றத்தின் வருடாந்த அறிக்கைகள், கணக்குகள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்தலும் அங்கீகரித்தலும்.

### 2.3 மகா சபைக் கூட்டங்கள்

2.3.1 வருடாந்த மகாசபைக் கூட்டம் கணக்காண்டு நிறைவடைந்து 06 மாதங்களுக்குள் நடத்தப்படல் வேண்டும்.

2.3.2 பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் அல்லது /மற்றும் தலைவரின் தற்றுணிபின்படி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மகாசபைக் கூட்டத்தை நடத்த இயலும்.

2.3.3 மகாசபை உறுப்பினர் எண்ணிக்கையில் 1/3 பங்கு மகாசபையின் கூட்ட நடப்பெண்ணாக அமையும்.

2.3.4 மகா சபைக் கூட்டமொன்றின் பிரேரணை தொடர்பான தீர்மானிக்கும் வாக்கினை அளிக்கும் அதிகாரம் தலைவருக்கு உண்டு.

### 3. மன்றத்தின் பணிப்பாளர் சபை

3.1 மன்றத்தின் பணிப்பாளர் சபை குறைந்தபட்சம் ஏழு உறுப்பினர்களை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டுமென்பதோடு உச்ச எண்ணிக்கை பதினைந்து பேர்களை விஞ்சியதாக அமைதலாகாது.

3.2 மன்றத்தின் பணிப்பாளர் சபையின் உள்ளடக்கம் கீழே குறிப்பிட்டவாறு அமையும்:-

(அ) பீ. ஹரிசன் அவர்கள் பதவிவழியாக மன்றத்தின் தலைவராகவும் மன்றத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் அமைவார்;

(ஆ) ஆயுட்கால உறுப்பினர்கள் மத்தியில் இருவர் தலைவரால் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக கீழே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக நியமிக்கப்படல் வேண்டும்:-

1. செயலாளர் /பணிப்பாளர் (அபிவிருத்தி மற்றும் உறுப்பினர் உறவுகள்)
2. பொருளாளர் /பணிப்பாளர் (நிதி)

(இ) மகாசபையினால் தனது உறுப்பினர் மத்தியிலிருந்து ஏனைய பணிப்பாளர்கள் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்படல் வேண்டும்.

(ஈ) அவ்விதமாக தெரிவுசெய்யப்படுகின்ற பணிப்பாளர்சபை உறுப்பினர்களுக்கான விடயப் பொறுப்புகளை கையளிக்கும் அதிகாரம் தலைவருக்கு உரித்தானதாகும்.

### 3.3 பணிப்பாளர் சபையின் பதவிக்காலம்

3.3.1 மகா சபையினால் நியமிக்கப்படுகின்ற பணிப்பாளர் சபையின் பதவிக்காலம் 03 வருடங்களாக அமையும்.

3.3.2 மேலே 3.3.1 இன் பிரகாரம் மகா சபையினால் நியமிக்கப்படுகின்ற பணிப்பாளர் சபை உறுப்பினர் பதவியில் வெற்றிடமொன்று தோன்றியவிடத்து அச்சபையின் காப்பங்கீகாரத்திற்கு கட்டுப்பட்டதாக பணிப்பாளர் சபையினால் உறுப்பினர் மத்தியிலிருந்து ஒருவர் வெற்றிடமாகிய பணிப்பாளர் சபை உறுப்பினர் பதவிக்காக தெரிவுசெய்யப்பட இயலும். எனினும் அடுத்துறுகின்ற மகாசபைக் கூட்டத்தில் அதற்கான காப்பங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள ஆவனசெய்தல் வேண்டும். வெற்றிடத்தை நிரப்புவதற்காக நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினரின் பதவிக்காலம் சட்டத்தின் 2.3 (இ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமையும்.

3.3.3 விதி 3.2 (அ) இன் பிரகாரம் நியமிக்கப்படுகின்ற பணிப்பாளர்களின் பதவிக்காலம் 03 வருடங்களாக அமைதல் வேண்டுமென்பதோடு அவர்களை நீக்கி ஆயுட்கால உறுப்பினர் மத்தியிலிருந்து வெற்றிடத்தை நிரப்புவதற்கான அதிகாரம் தலைவருக்கு உண்டு. ஆயினும் வெற்றிடம் தோன்றிய பதவிக்காக நியமிக்கப்படுபவரின் பதவிக்காலம் சட்டத்தின் 2.3 (இ) பிரிவுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

### 3.4 பணிப்பாளர் சபையின் தத்துவங்கள்

3.4.1 மன்றத்தின் நிறைவேற்று அதிகாரத்தை பணிப்பாளர் சபை கொண்டிருப்பதோடு பணிப்பாளர் சபையினால் தனது தத்துவங்களை தலைவருக்கும் பணிப் பாளர் சபை உறுப்பினர்களுக்கும் கையளிக்கப்பட முடியும்.

3.4.2 பணிப்பாளர் சபைத் தீர்மானத்தை அமுலாக்கும் தத்துவம் தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளரிடம் கையளிக்கப்படும்.

### 3.5 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

3.5.1 குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் பணிப்பாளர் சபைக் கூட்டம் நடத்தப்படல் வேண்டும்.

3.5.2 மன்றத்தின் செயலாளர் பணிப்பாளர் சபையின் செயலாளராகவும் அமைவதோடு அவரால் முறைப்படி பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கான அழைப்பு விடுத்தலும் அறிக்கைகள் பேணுதலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.5.3 பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர் தலைமை வகித்தல் வேண்டுமென்பதோடு அவர் இல்லாத சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் சபையினால் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்ற தலைவர் பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு தலைமை வகித்தல் வேண்டும்.

3.5.4 பணிப்பாளர் சபையின் கூட்ட நடப்பெண் மொத்த பணிப்பாளர் சபை உறுப்பினர் எண்ணிக்கையில் 1/3 பங்கினராக அமைதல் வேண்டும்.

3.5.5 பணிப்பார் சபையின் தீர்மானம் சம்பந்தமான தீர்மானிக்கும் வாக்கினை அளிக்கும் அதிகாரம் தலைவருக்கு உரித்தானதாகும்.

### 3.6 பணிப்பாளர் சபையின் உறுப்பாண்மை முடிவுறுதல்

கீழே குறிப்பிட்ட ஏதுக்களின் பேரில் பணிப்பாளர் சபையின் உறுப்பாண்மை முடிவுறுத்தப்படும்.

3.6.1 மூன்று வருட பதவிக்காலம் நிறைவடைதல்.

3.6.2 முறைப்படி இராஜினாமை செய்தல்

3.6.3 உறுப்பினரின் இறப்பு

3.6.4 உறுப்பினர் சித்த சுவாதீனமிழத்தல் அல்லது செயற்பட இயலாதவகையில் உடல்ரீதியான பலவீன நிலையுறல்.

3.6.5 பணிப்பாளர் சபையிலிருந்து நீக்குதல் 2.3 (இ) இன் பிரகாரம் நியமிக்கப்படுகின்ற பணிப்பாளர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.

3.6.6 மகா சபையினால் பணிப்பாளர் சபை உறுப்பாண்மையிலிருந்து வெளியேற்றப்படுதல்.

3.6.7 விதி 1.8 இன் பிரகாரம் மன்றத்தின் ஆயுட்கால உறுப்பாண்மை இல்லாதொழிதல்

### 3.7 பணிப்பாளர் சபையின் பொறுப்புகள்

3.7.1 அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டத்திற்கிணங்க மன்றத்தின் பணிகளை நெறிப்படுத்துதல், ஒழுங்குறுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

3.7.2 மன்றத்தின் நிதிசார் மற்றும் நிதிசாரா சொத்துக்களை சிறப்பாக முகாமைசெய்தலும் பாதுகாத்தலும்

3.7.3 மன்றத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றிக்கொள்ள அவசியமான அனைத்தையும் செய்தல்.

3.7.4 நிதிசார் மற்றும் நிதிசாரா கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தையும் சரிவர கணக்குப் பதிய அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

3.7.5 வருடாந்த வரவு செலவுத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டத்திற்காக மகா சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்.

3.7.6 வருடாந்த கணக்குகளையும் கணக்காய்வு அறிக்கைகளையும் மகா சபைக்கு சமர்ப்பித்தல்.

3.7.7 மூலோபாயத் திட்டமிடல் மற்றும் மன்றத்தின் முன்னேற்றத்தையும் விருத்தியையும் உறுதிப்படுத்துதல்

3.7.8 மன்றத்திற்கு அவசியமான நிதியங்களை உருவாக்கிக் கொள்வதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ளலும் அதனோடு தொடர்புடைய உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

3.7.9 மன்றத்திற்காக சொத்துக்களைக் கொள்ளல், விற்பனை செய்தல், அடகு வைத்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளல்

**4. மன்றத்தின் தலைவர்**

4.1 பீ.ஹரிசன் அவர்கள் மன்றத்தின் ஆயுட்கால தலைவராவார்.

4.2 பீ. ஹரிசன் அவர்களுக்கு தலைவர் பதவியை வகிக்க இயலாத சந்தர்ப்பங்களில் அவரது வாழ்க்கைத்துணை அல்லது 18 வயதுக்கு மேற்பட்ட ஒரு பிள்ளை மன்றத்தின் தலைவர் பதவிக்காக நியமிக்கப்படுவார். இத்தகைய சந்தர்ப்ப மொன்றில் புதிய தலைவர் யார் என்பதை பணிப்பாளர் சபையின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டு மென்பதோடு செயலாளரால் புதிய நியமனம் பற்றி மகா சபைக்கு விழிப்புணர்வூட்டப்படலும் வேண்டும்.

4.3 தலைவர் மன்றத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் அமைவார்.

4.4 மன்றத்தின் நிறைவேற்று அதிகாரங்கள் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளருக்கு உரித்தானதாக அமைவதோடு அவ்வதிகாரங்கள் பணிப்பாளர் சபையினால் அமுலாக்கப்படல் வேண்டும்.

**5. மன்றத்தின் செயலாளர்**

5.1 3.2 (ஆ) விதியின் பிரகாரம் தலைவரால் மூன்று வருட காலத்திற்காக மன்றத்தின் செயலாளர் நியமிக்கப்படுவார்.

5.2 மேலே 5.1 இன் பிரகாரம் நியமிக்கப்படுகின்ற செயலாளரின் மூன்றாண்டு காலமானது மகா சபையினால் 3.2 (இ) இன் பிரகாரம் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் நியமிக்கப் படுகின்ற தினத்திலிருந்தே தொடங்குகின்றது.

5.3 மன்றத்தின் செயலாளர் அதன் பணிப்பாளராக (அபிவிருத்தி மற்றும் உறுப்பினர் உறவுகள்) செயலாற்றுதல் வேண்டும்.

5.4 உறுப்பினர் பதிவேடுகளை ஒழுங்காக பேணிவருதல், மகா சபைக் கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்தல் மற்றும் பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கு அழைப்புவிடுத்தல் செயலாளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5.5 சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அவசியப்படுகின்ற நியதிச்சட்டமுறையான பணிகளை ஈடேற்ற வேண்டியது செயலாளரின் பொறுப்பாகும்.

5.6 பணிப்பாளர் (அபிவிருத்தி மற்றும் உறுப்பினர் உறவுகள்) பதவிக்கு பணிப்பாளர் சபையினால் கையளிக்கப்படுகின்ற கடமைகளை ஈடேற்றுதல்.

**6. மன்றத்தின் பொருளாளர்**

6.1 3.2 (இ) விதியின் பிரகாரம் தலைவரால் நியமிக்கப்படுவார்.

6.2 மேலே 6.1 இன் பிரகாரம் நியமிக்கப்படுகின்ற பொருளாளரின் பதவிக்காலம் 03 வருடங்களாகும். ஆயினும் பதவிக்காலமானது விதி 3.3.3 இன் பிரகாரம் மகாசபையினால் பணிப்பாளர் சபை நியமிக்கப்படுகின்ற தினத்தில் இருந்தே ஆரம்பிக்கும்.

6.3 மன்றத்தின் பொருளாளர் அதன் (நிதிப்) பணிப்பாளராக செயலாற்றுதல் வேண்டும்.

6.4 முறைப்படி நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளல், நிதிசார் பதிவேடுகளைப் பேணிவருதல் மற்றும் வருடாந்த கணக்குகளை தயாரித்தல் பொருளாளரின் பொறுப்பாக அமையும்.

6.5 மன்றத்தின் சொத்துக்களை முறைப்படி பதிவேடுகளில் பதிதல், நிதியல்லாத உதவிகளையும் கொடைகளையும் பதிவேடுகளில் பதிதல் பொருளாளரால் முறைப்படி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6.6 பணிப்பாளர் சபையினால் பணிப்பாளரிடம் (நிதி) கையளிக்கப்படுகின்ற கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுதல்.

6.7 வருடாந்த இறுதிக் கணக்குகளைத் தயாரித்து கணக் காய்வுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தலும் கணக்காய்வு அறிக்கையை மகாசபைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தலும்.

**7. மன்றத்தின் பணக்கொடுக்கல் வாங்கல்களும் கணக்குகளும்**

**7.1 பணமும் வங்கிக் கொடுக்கல் வாங்கல்களும்**

7.1.1 மன்றத்தினால் வங்கி நடைமுறைக் கணக்குகள், சேமிப்புக் கணக்குகள் மற்றும் நிலையான வைப்புக் கணக்குகளை பேணிவருதல் வேண்டும்.

7.1.2 வங்கிகளில் பணவைப்புகளை மீளப்பெறுதல், செலவுகளை மேற்கொள்ளலுக்கான ஆவணங்களிலும் காசோலைகளிலும் மன்றத்தின் தலைவராலும் பொருளாளராலும் கையொப்பமிடப்படல் வேண்டும்.

7.1.3 மன்றத்திற்கு கிடைக்கின்ற பணம் அனைத்தும் வங்கியில் வைப்புச் செய்யப்படல் வேண்டுமென்பதோடு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகையில் வங்கிக் கணக்குகள் ஊடாக மேற்கொள்ளப்படலும் வேண்டும்.

7.1.4 அனைத்துக் கொடுப்பனவுகளுக்குமான அதிகாரத் தத்துவம், அங்கீகரித்தல் தலைவருக்கு உரித்தானதாக அமையுமென்பதோடு பொருளாளர் அனைத்துக் கொடுப்பனவுகளையும் உறுதிப்படுத்தி கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**7.2 கணக்குகள்**

7.2.1 மன்றத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக அமைதல் வேண்டும்.

7.2.2 கொடுக்கால் வாங்கல் சம்பந்தமான பிரதான கணக்குகள், பேரேட்டுக் கணக்குகள், பிரத்தியேக பேரேட்டுக் கணக்குகள் முறைப்படி பேணிவரப்படல் வேண்டும்.

7.2.3 நிதியாண்டு முடிவடைந்து 03 மாதங்களுக்குள் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு சட்டத்தின் 10(3) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வுக்காக ச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7.2.4 மேலே 7.2.3 இன் பிரகாரம் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட முன்னர் வருடாந்த மகாசபைக்கு கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

**8 மன்றத்தின் பதவியணி பற்றிய ஏற்பாடுகள்**

8.1 மன்றத்திற்கு அவசியமான பதவியணியைத் தீர்மானித்தல், சம்பளம் மற்றும் படிகளைத் தீர்மானித்தல், ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, பதவி நீக்கம் செய்தல், சேவையை முடிவுறுத்துவதற்கான அதிகாரம் மற்றும் ஊழியர் நிர்வாக விதிமுறைகளை ஆக்குவதற்கான தத்துவம் பணிப்பாளர் சபைக்கு உரித்தானதாகும்.

8.2 ஊழியர் சம்பந்தமான நியமன மற்றும் ஒழுக்காற்று அதிகாரியாக பணிப்பாளர் சபையின் தத்துவங்கள் மன்றத்தின் தலைவர்/ முகாமைத்துவப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட இயலும்.

8.3 மன்றத்தின் பதவியணி தலைமையதிகாரியாக அதன் தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர் அமைவார்.

8.4 மன்றத்திற்கு அவசியமான ஆலோசனை சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஆலோசகர்களை நியமிப்பதற்கான அதிகாரம் தலைவருக்கு உண்டு.

**9. மன்றத்தின் கூட்டங்கள்**

9.1 மன்றத்தின் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள், விசேட மகாசபைக் கூட்டங்கள் மற்றும் மகாசபைக் கூட்டங்களுக்கான அழைப்புவிடுத்தல் முறைப்படி மன்றத்தின் செயலாளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

9.2 வருடாந்த மகாசபைக் கூட்டம் நடாத்தப்பட உள்ள தினத்திற்கு 14 நாட்களுக்கு முன்னராகவும் விசேட மகாசபைக் கூட்டத்திற்கு 07 நாட்களுக்கு முன்னராகவும் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் மற்றும் விளைவாந்தன்மையுடைய ஆவணங்களுடன் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

9.3 சட்டம், விதிகள் மற்றும் மகாசபைத் தீர்மானங்கள் முதலியவற்றினால் உள்ளடக்கப்படாத விடயங்கள் சம்பந்தமாக கட்டளைகளை பிறப்பிக்கவும் தீர்மானங்களை எடுக்கவும் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

***10. மன்றத்தின் உத்தியோகபூர்வ இலச்சினை***

*10.1 மன்றத்திற்கென உத்தியோகபூர்வ இலச்சினை யொன்று இருத்தல் வேண்டும்.*

*10.2 உத்தியோகபூர்வ இலச்சினை மன்றத்தின் பணிப்பாளர் சபை செயலாளரின் பொறுப்பில் இருத்தல் வேண்டுமென்பதோடு அதனைப் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டியது அவரது பொறுப்பாக அமையும்.*

*10.3 உத்தியோகபூர்வ இலச்சினை பொறிக்கப்பட்டு மேற்கொள்ளப்படுகின்ற அலுவல்களின்போது தலைவர் மற்றும் செயலாளர் ஆகிய இருவரும் கையொப்பமிடல் வேண்டும்.*

*பீ. ஹரிசன்,*
*தலைவர்,*
*பீ. ஹரிசன் சமுதாய அபிவிருத்தி மன்றம்.*

*எஸ். ஏ.டி.எஸ்.எல். வீரசிங்க,*
*செயலாளர்/முகாமைத்துவப் பணிப்பாளர்,*
*( அபிவிருத்தி மற்றும் உறுப்பினர் உறவுகள்)*
*பீ. ஹரிசன் சமுதாய அபிவிருத்தி மன்றம்.*

*5- 612*

---

## "சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜனசேவா மன்றம்" ஐக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*ஜே. எம். ஆனந்த குமாரசிறி ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கு அமைய "சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜனசேவா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த "சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜனசேவா மன்றம்" ஐக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-*

*(அ) சத்திய ஸ்ரீ காடுறு கணபதி கோவில் மற்றும் அத்தகைய புனித பூமியை மீள் சீரமைத்தல்;*

*(ஆ) பக்தர்களுக்கு இலவசமாகத் தங்குமிட வசதிகளை வழங்கும் பொருட்டு தங்குநர் மண்டபமொன்றை நிறுவி அதற்கு வேண்டிய அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்தல்;*

*(இ) தொழில் வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கு கோயில் ரீதியில் அனுசரணை மூலம் தொழிற் பயிற்சிகளை வழங்குவதற்காக நடவடிக் கைகளை மேற்கொண்டு தொழில் வாய்ப்புகளில் ஈடுபடச் செய்தலும்*

*பிறவும்.*

*ஜே. எம். ஆனந்த குமாரசிறி,*
*பாராளுமன்ற உறுப்பினர்,*
*மொணராகலை மாவட்டம்.*

*5-519*

---

## லசாலியன் சமூக கல்விச் சேவைகள் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*கலாலுகொட கங்கானம்கே பியதாச ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 48(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "லசாலியன் கல்விச் சேவைகள் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" என்றழைக் கப்படுகின்ற சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த "லசாலியன் கல்விச் சேவை" ஐக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-*

*(1) பாடசாலைக் கல்வியை விட்டுச் சென்ற 16-25 வயதிற்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு தேசிய வாழ்கைத் தொழிற்பயிற்சி அதகாரசபையுடன் (NVTA) இணைந்து வாழ்க்கைத் தொழிற்பயிற்சியை அளித்தல்;*

*(2) வறிய பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு பாலர் பாடசாலைச் சேவையை வழங்குதல்;*

*(3) போதைப்பொருட்களுக்கு புதிதாக அடிமைப் பட்டோர்களை அத்தகைய பழக்கத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டு புனர் வாழ்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்;*

*(4) கர்ப்பிணித் தாய்மார் மற்றும் சிசுக்களின் உடல்நலத்தைப் பேண ஊட்டமளித்தல் மற்றும்*

*பிறவும்.*

*கே. கே. பியதாச,*
*பாராளுமன்ற உறுப்பினர்,*
*நுவரெலியா மாவட்டம்.*

*5-662*